பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை



## நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்;...

ஏசாயா : 9-6


செய்தி மலர்
2014
டிசம்பர்

இதழ் : 7
மலர் : 15


imikimi.com

# தலைவர் உரை



கிஸ்துவுக்குள் பிரியமுள்ள சகோதர சகோதரிகட்கு கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

தேவனுடைய பெரிதான கிருபையால் 2014 ஆம் வருடத்தின் கடைசிமாதத்தில் பிரவேசிக்கும் பாக்கியத்தை தேவன் நமக்கு தந்திருக்கிறபடியால் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம். இந்த வருடத்தின் 11 மாதங்களிலும் தேவ கரம் நம்மோடு இருந்தபடியால் தேவனுக்கு நன்றி செலுத்துவோம். சபையின் ஊழியங்கள் ஆராதனைகள், எல்லாவற்றிலும் தேவ ஆசீர்வாதமும்,பிரசன்னமும் இருந்தபடியால் தேவனுக்கு ஸ்தோத்திரம்.

இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதலுக்காகவும்,சபையின் ஊழியங்கள், ஆராதனைகள்,விஷேசித்த நிகழ்ச்சிகளுக்காகவும், ஜெபித்து கொள்வோம். டிசம்பர் மாதம் வந்தாலே நமக்கு குதூகலமான மாதமாக மாறிவிடும். விஷேசித்த தினங்களை கர்த்தருக்கென்று மகிமையாக ஆசரிப்போம்.

புசித்தாலும்,குடித்தாலும் எதை செய்தாலும் எல்லாவற்றையும், தேவனுடைய மகிமைக்கென்றே செய்யுங்கள்" (1 கொரி 10:31) இந்த மாதத்தில் நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து உலகத்தில் பிறந்தார் என்ற செய்தியை அறிவிப்பதற்கு, வெளிப்படையாய் இந்த குவைத் தேசத்திலும் கூட விஷேசித்த நாட்களை உருவாக்கி பண்டிகைகளை கொண்டாடி வெளிபடுத்துகிறோம். இந்த வருடத்தில் இந்த மாதத்தை நமது நண்பர்களுக்கும், அண்டை வீட்டாருக்கும்,கிறித்துவை அறிவிக்கிற மாதமாக பயன்படுத்தினால்,கிறிஸ்து இயேசு மகிமையடைவார், கிறிஸ்மஸ் என்றாலே பரிசுதான் (Gift) ஞாபகம் வரும், விஷேசமாக பிள்ளைகளுக்கு. அது உண்மைதான், பிதாவாகிய தேவன் இயேசுவை பரிசாக (Gift) இந்த பூ உலகத்திற்கு அனுப்பினார்.

"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்"(யோவான் 3:16)

பிரியமானவர்களே ! பிதாவாகிய தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனையே தந்து, நம்மை நேசிக்கிறார், இது நாம் கெட்டு போக கூடாது என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த இயேசுவை பரிசாக பெற்று கொள்கிறவர்கள் கெட்டு போவதில்லை, நம்முடைய வாழ்க்கையில் இந்த இயேசுவை பெற்றிருந்தால்,நாம் கெட்டு போவதில்லை. இந்த வருடத்தின் கடைசி மாதத்தில் இருக்கும் நாம் நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம்,

கடந்த வருடத்தை காட்டிலும், நம் வாழ்க்கையில் இயேசுவை போல் குணாதிசயம் மாறியிருந்தால், இயேசுவை பரிசாக பெற்றிருக்கிறோம் என்று அா்த்தம். இல்லையேல் பிதாவாகின தேவன் பரிசாக இயேசுவை தந்தும் நாம் அதை பெற்று கொள்ளால் இருக்கிறோம்

உலக பரிசுகள் அனைத்தும் அழியகூடியவைகள், ஆனால் அழியாத பரிசு தேவன் நமக்கு தந்த இந்த ஒரே பேரான அவருடைய நேச குமாரனாகிய கிறஸ்து இயேசு மாத்திரம்தான்

பிரியமானவா்களே அழிய கூடிய பரிசுகளை காட்டிலும், அழியாத இயேசு முக்கியம், நம்முடைய பிள்ளைகளுக்கும் இதை சொல்லி கொடுப்போம். இயேசு என்ற விலையேறப் பெற்ற பரிசை நாம் பெற்றிருந்தால், அவரை போல நாமும் கொடுக்கிறவா்களாய் மாறி விடுவோம், நம்முடைய பிள்ளைகளையும் கொடுக்கிறவா்களாக மாற்றுவோம். இதின் நிமித்தம் ஆண்டவா் இயேசு மகிமைபடுவாா்.

இந்த வருடம் முதல் நாம் மற்றவா்களுக்கு கொடுக்கிறவா்களாக இருப்போம் அன்று தீா்மானியுங்கள், பரலோகத்தில் உங்கள் பொக்கிஷங்களை சோ்த்திவோம்.

தேவம் தாமே நம்மை ஆசீா்வதிப்பாராக ! ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்

அன்பு சகோதரன் R. ரவிச்சந்திரன்

## தியாக புருஷா்களின் சுய சரிதை

கிறிஸ்துவின் அடிச்சுவட்டின் பின்பற்ற விரும்பும் ஒவ்வொருவரும், ஹட்ஸன் டெய்லா், C.T ஸ்டட், பிரெய்னாட் வில்லியம் கேரி, வில்லியம்பூத், ஜிம் இலியட்.. ரேபன்ற உத்தம தியாக புருஷா்களின் சுய சரிதைகளை கண்டிப்பாக வாசிக்க வேண்டும். சவால் நிறைந்த இவா்களின் வாழ்வு உங்கள் உள்ளத்தையும் இறுகபற்றட்டும், அக்கினமயமான இவா்களின் ஜீவியம், சுயத்தையும் – குடும்பத்தையும் – சுக ஜீவியத்தையும் மையமாகக் கொண்டதோ், கிறிஸ்தவ ஜீவியத்திலிருந்து நம்மை விடுதலையாக்கி கிறிஸ்துவை பற்றிய தியான வாழ்க்கைக்குள் நம்மை தீவிரித்து நடத்தட்டும்!!

# தேவ செய்தி

## ஒன்றுமில்லை

இச்செய்தியின் ஊடாய் உங்களோடு பேச கிருபை செய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. **"கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரிகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள்"** (லூக். 1:28) என்ற வார்த்தையோ ஆசீர்வாதமான வார்த்தை. ஆனால் மரியாளோ கலங்குகிறாள். தேவ தூதன் சொன்ன எல்லா வார்த்தைகளையும் நன்கு தன் மனதில் வாங்கிக் கொண்ட மரியாள் தேவ தூதனை நோக்கி, "எனக்கு சம்பந்தம் பேசி வைத்திருக்கிறார்கள்: ஆனால் நீரோ சம்பந்தம் இல்லாமல் ஏதேதோ பேசுகிறீரே! நான் பெற்றெடுக்கும் குமாரன் யாக்கோபின் குடும்பத்தாரை ஆளுகை செய்யுமா! என் குமாரனுக்கு தாவீதின் ராஜ சிங்காசனமா! (லூக். 1:29-34) நீர் இடம் மாறி, ஆள் மாறி என்னிடத்திற்கு தவறுதலாக வந்துவிட்டீர்கள்" என்று சொல்லி இருக்கக் கூடும்.

**"தேவ தூதன் அவளுக்கு பிரதியுத்தரமாக பரிசுத்த ஆவி உன்மேல் வரும். உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும். ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்"** (லூக். 1:35) என்று கேட்ட பொழுதுதான் மரியாளின் உள்ளத்தில் தெளிவு பிறக்கிறது. தனக்கு மாம்சத்தில் பிறக்கப் போகும் குழந்தையைக் குறித்து தேவ தூதன் சொன்னார் என்று எண்ணி இருந்த போது கலக்கமும் பயமும் அடைந்த மரியாளுக்கு: பரிசுத்த ஆவியினால் தேவனுடைய குமாரனை பெற்றெடுக்கும் சிலாக்கியத்தை அறிந்த பொழுது, மனதில் மகிழ்ச்சியும் எழுச்சியும் உண்டானது. மரியாள் தேவதூதனை நோக்கிச் சொன்னாள், "இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை. உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது" (லூக். 1:38) என்று. மரியாள் தனக்கு வரவிருக்கும் எவ்வித நிந்தையையும், அவமானத்தையும், கொடூரத்தையும் எண்ணிப் பார்க்கவுமில்லை, பிறரிடம் ஆலோசனை கேட்கவுமில்லை: தன்னை அர்ப்பணித்து தேவ சித்தம் நிறைவேற ஒப்புக் கொடுத்தாள்.

தேவனுக்கு பிரியமானவர்களே! தேவனுடைய சித்தம் நம் சபையில், சமுதாயத்தில் நிறைவேற நம்முடைய பங்கு எப்படி இருக்கிறது என்று நம்மை நாமே கேட்டுப் பார்த்தால், பதில் சொல்லாமல் எப்படி நழுவுவது என்பதுதான் நம்முடைய விடையாக இருக்கும். மரியாளோடு கர்த்தர் இருந்த காரணத்தினால்தான் மரியாளுக்கு குடும்பத்தைக் குறித்தோ, சமுதாயத்தைக் குறித்தோ பயமோ திகைப்போ ஏற்படவில்லை. எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலன் உண்டு என்று நிரூபணமாக்கினாள். ஏழ்மையில், வறுமையில், வெறுமையில், வேதனையில் இயேசு இரட்சகரை ஈன்று இந்த உலகை இரட்சிக்க சமர்ப்பணம் செய்தாள். இயேசுவை பெற்றெடுக்கச் செய்த மரியாளை தேவனும் மகிமைப்படுத்தினார்.

இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்திருக்கிறார் (லூக். 19:10) என்று அறிந்தும் விசுவாசித்தும் இருக்கிற நாம்: நம்மை நம் பாவத்திலிருந்து மீட்டு இரட்சித்த இயேசுவை நம்முடைய வாழ்வில் தரித்திருக்கிறோமா? இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பை நினைவு கூறும் இந்நாட்களில் கிறிஸ்தவர்களாகிய நாம் இயேசு கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு இயேசுவை அறிவிக்க நம்முடைய பங்கு, நம்முடைய செயல்பாடுகள் எப்படி இருக்கிறது! என்றும் எண்ணிப் பார்க்க வேண்டும். கல்லறைக்கு செல்லு முன்னே எவ்வளவு சில்லறையை சேர்க்க முடியும் என்றுதான் நாம் இரவும் பகலும் நம்மை செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். செல்வங்கள் நமக்குத் தேவைதான். ஆனால் செல்வங்கள் எல்லாம் செல்லக் (நிரந்தரமானதல்ல) கூடியது என்பதும் நாம் மனதில் கொள்ள வேண்டும்.

அன்று இயேசு இரட்சகர் பிறந்த செய்தியை தேவ தூதர்கள் அறிவித்து ஊழியக்காரர்களாய் செயல்பட்டார்கள். இன்று தேவ தூதர்கள் செய்த பணி நம்மேல் சுமத்தப்பட்டிருக்கிறது. **"செய் அல்லது அனுப்பு"** என்று அநேகர் சொல்வதுபோல, நாம் நம்மால் முடிந்தமட்டு சில நாழிகைகளை தேவனுக்கென்று இந்த மாதத்திலாவது ஒதுக்கி தேவ தூதர்கள் செய்தது போல இயேசுவை பிறருக்கு அறிவிக்க நம்மை அர்ப்பணிக்கலாமே. தந்தை. பெர்க்மான்ஸ் பாடினதுபோல "ஒரு மணி நேரம் கொடுத்துப் பாரு. உன்னை தேவன் உயர்த்துவாரு". இருக்கிற 24 மணி நேரமே போதல்ல, போதுமான அளவு தூங்கி ஓய்வு எடுக்கக் கூட முடியாம ஓடி கிட்டிருக்கேன் என்று சொல்லத்தோன்றுதா!

இரண்டாவது வாய்ப்பை பயன்படுத்தலாமே! **"உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்"** (2கொரி. 9:7) என்ற வசனத்தின்படி கொடுத்துதான் பார்ப்போமே. தேவனுக்கு நம்மேல் பிரியம் உண்டாகும் பொழுது தானியேல் 9:23–ன்படி நம்முடைய வேண்டுதல்கள், ஜெபங்கள் தேவனால் கேட்கப்பட்டு நிறைவேறுமே. ஒரு மணி நேரம் கொடுத்துப் பாரு – உன்னை தேவன் உயர்த்துவாரு" தந்தை. பெர்க்மான்ஸ் பாடியிருக்கிறாரே. நம் வாழ்க்கையின் தரம் தங்கத்தின் விலையைப் போல நடனமாடாமல், ராக்கெட் போல உயருமே.

எந்த நிலைமையில் நாம் இருந்தாலும், சூழ்நிலையும், கால நிலையும், மனித அலையும் நமக்கு எதிராக இருந்தாலும் நம் **"தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை"** (லூக். 1:37). கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. பிறந்த இயேசு உங்களோடு இருந்து வாழ வாழ்த்துகிறேன். கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்.

**கர்த்தர் கிருபையில்**

**சகோ. ஆரோக்கியதாஸ்**

# ஆராதனையை பற்றி

தாவீது காலத்தில் ஆராதனைக்கு மிக முக்கியம் அளிக்கப்பட்டது. முன் காலத்தில் பாடிய பழைய சங்கீதங்களுடன், தான் பாடிய சங்கீதங்களை இசையமைத்து பாடி ஆராதனை நடத்தப்பட்டது. கீமு 70 வரை யூத ஆலயத்தில் பலிகள் செலுத்தப்பட்டு ஜனங்கள் தேவனை ஆராதித்து வந்தார்கள். பின் நாட்களில் பலிகள் நிறுத்தப்பட்டு பாடல்கள் முக்கிய இடத்தை பிடித்தன. ஆவிக்குறிய ஆராதனையில் பாடல்களும் இசை கருவிகள் வாசிப்பதும் இடம் பெற்றன. வேதம் ஆராதனையைப் பற்றி கூறுவதை அறிந்து கொள்ளுங்கள்.

**பழைய ஏற்பாட்டில் ஆராதனையை குறித்து வார்த்தைகள்.**

ஹலல் (Halal)என்றால் மற்றவர்கள் காணும்படி துதி. கொண்டாடு, களிகூரு, என பொருள்படும். இந்த வார்த்தை பழைய ஏற்பாட்டில் 160முறை வருகிறது. டெஹில்லா (Tehillah) என்றால் தெளிவாக பாடி கொண்டாடி மகிழ்ந்து களிகூரு என்றும், ஷாபாக்(shabach) என்றால் சத்தமிட்டு, ஆர்பரி, முழக்கமிட்டு கெம்பீரி, வெற்றியில் களிகூறு, என்றும் சாமர் (Zamar)என்றால, நரம்பு அல்லது கம்பி வாத்தியங்களை மீட்டு என்றும், யாடா(Yadah) என்றால் கைகளை விரித்து, பணிந்து நன்றி செலுத்து என்றும், டௌடா(Towdah)என்றால் பயபக்தியோடு கைகளை விரித்து நில் என்றும் பாராக்(Barak) என்றால் படியிட்டு தொழுது கொள் என்றும், ஷாக்கா(Shachah) என்றால் பணிந்து, குனிந்து தொழுது கொள் என்று பொருள்படும்.

**புதிய ஏற்பாட்டில் ஆராதனையை குறிக்கும் வார்த்தைகள்:**

ஆய்னியோ(Aineo) என்றால் மிகுந்து சத்தத்தோடு கொண்டாடு என்றும் எப்பானியோ (Epaineo) என்றால் கரங்களை தட்டி ஆர்ப்பரி என்றும், யூலோஜியோ (Eulogeo)என்றால் புகழ்ந்து பேசு என்றும். டாக்சா(Doxa) என்றால் மகிமை செலுத்து என்றும் பொருள்படும்.

இப்படி ஆலய வழிபாடுகள், ஆராதனைகள் பழங்காலம் தொட்டு நடந்து வருகிறது. தற்காலத்தில் சிலர் கைதட்ட கூடாது என்றும், வாத்திய கருவிகள் வாசிக்ககூடாது, சத்தமிட்டு துதிக்க கூடாது, என்றும் சொல்லி ஆராதனையின் பொருளையே மாற்றி பிரசங்கிக்கிறார்கள். பாடின சரணங்களை திரும்ப பாடுவது தவறு என்று கூறுகிறவர்களும் உண்டு, (எஸ்றா 3:11,12ல்)அவருடைய கிருபையை என்றுமுள்ளது என்று அவரை புகழ்ந்து மாறி மாறி பாடி துதித்தார்கள் என்றும், மகா கம்பீரமாய் ஆர்ப்பரித்தார்கள் என்றும், எழுதியிருப்பதை சிந்திப்பீர்களா. சீர்பொருந்தி தேவனை ஆராதிக்க தேவ வசனத்தின் படி செய்வீர்களா. !

# (நம்மை) பதம் பார்க்கும் பத்து கேள்விகள்

நம் ஆவிக்குரிய நிலையில் செழிப்பதற்கு கீழ்காணும் கேள்விகளை தினசரி இல்லா விட்டாலும் அவ்வப்போது நம்மை நாமே கேட்டு பார்த்துக் கொள்வது நல்லது இல்லையா?

1. நான் இன்று யாராகிலும் ஒருவரை .. என் சிந்தையிலும் கூட நியாயம் தீர்த்தேனா?
2. நான் என் இதய பூர்வமாய் முற்றிலும் மன்னியாமல் யாரேனும் இருக்கிறார்களா.?
3. நான் பிறரை பற்றி சொல்லப்பட்ட தீமையான விஷயங்களை அவை உண்மைதானா என சோதிக்காமலே நம்பிவிட்டேனா?
4. இன்று முழுவதும் என் சிந்தைகள் தூய கற்புள்ளதாய் இருந்ததா?
5. நான் என்னை பகைத்தவர்களுக்காகவும் என்னை துன்பறுத்தினவர்களுக்காகவும் ஜெபித்தேனா?
6. நான் இன்று யாரேனும் ஒருவரிடம் பொறாமை கொண்டேனா?
7. நான் என் சகவிசுவாசிகளை மேன்மையாக எண்ணி அவர்களில் மகிழ்ந்திருந்தேனா?
8. நான் என் சக சகோதரர்களின் ஆவிக்குரிய மற்றும் சரீர தேவைகளுக்காக அக்கரை காட்டினேனா?
9. நான் என்னை அறியாமலேயே யாருக்காவது தீங்கு இழைத்தேனா?
10. நான் சொன்ன என் வார்த்தைகளையும் கொடுத்த வாக்குகளையும் நிறைவேற்றினேனா?.

## தெய்வ பயமும் தாழ்மையும்!

நீங்கள் எதை செய்தாலும், கர்த்தருக்கு பயப்படுதலே மிக முக்கிய ஸ்தானத்தை வகிக்கட்டும். அதுவே நமமைத் தீமையை விட்டு தூர தூர விலகி ஓடசெய்யும் "அளவுக்கு மீறி" நாம் தேவனுக்கு பயந்து அவரில் அன்பு கூர்ந்துவிட்டோம் என்று ஒருக்காலும் சொல்ல முடியாது. எனவே முழு பெலத்தோடு கர்த்தருக்கு பயந்து வாழுங்கள்.!

உங்களை பற்றிய தாழ்மையான சிந்தை உங்களில் வேர் கொண்டு நிலைபெற தீர்மானமான முழு இருதயத்தோடு பிரயாசபடுங்கள். உங்ளை குறித்து எவ்வித மேன்மையான சிந்தையையும் பலவந்தமாக வெறுத்து தள்ளுங்கள். மேட்டிமைக்கும் "எனக்கு-எல்லாம்-தெரியும் " என்ற மனபோக்கிற்கும் எதிராக காவல் புரியுங்கள். அதை நரகத்திற்கு ஒப்பாக கருதி ஒதுங்கி விலகுங்கள். இப்போது நீங்கள் உண்மையான ஞானவான்கள்.

*எலியாஸ் அக்லாக்ஸன்*

## ஜெபவீரராக விளங்க சில ஆலோசனைகள்

வரும் வாரங்களிலும் தொடர்ச்சியாக காண இருக்கிறோம் தொடர்ந்து படித்து ஜெப வீரராக இருப்பவர்கள் மாவீரராக நம்மை ஒரு படி முன்னேற்றிக்கொள்வோம். 10 பாகங்களாக பிரித்து நமது ஆவிக்குறிய வளர்ச்சிக்கு ஏதுவாக இருக்க இதை பிரசரிக்கிறோம்.

ஒரு சிங்கம் தான் விரட்டி செல்லும் பிராணியியைப் பிடிக்கும்போது முதலில் அதின் தொண்டையைதான் பிடிக்கும், ஏனெனில் தொண்டையை பிடித்தால்தான், அந்த மிருகத்திற்கு சத்தமிட முடியாது.மிக விரைவில் முச்சி திணறிப் போகும். பின்பு அதனால் தப்பி ஓட முடியாது.

சாத்தான் ஒரு விசுவாசியை மேற்கொள்ள நினைக்கும் போது, முதலில் அவரது தொண்டையாகிய ஜெப ஜீவியத்தைதான் பிடித்து நிறுத்துகிறான். சுவாசத்தை போல் இருக்கும் அவன் ஜெபத்தைப் பிடித்து நிறுத்தி வைத்துவிட்டால் பின்பு அவனை மேற்கொள்வது எளிது என்று அவன் எண்ணுகிறான்.

ஆகவேதான் பேதுரு எச்சரிக்கிறார். தெளிந்த புத்தியுள்ளவனாய் இருங்கள், விழித்திருங்கள், ஏனெனில் உங்கள் எதிராளி பிசாசானவன் கெர்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடி சுற்றி திரிகிறான்" (1 பேதுரு5:8)

நாம் ஜெபிக்க முடியாதபடி, என்னென்ன தடைகளை கொண்டு வர முடியுமோ அத்தனையையும் சாத்தான் கொண்டு வருவான். நீ ஜெபத்தில் உறுதியாய் தரித்திருப்பாயானால், அவன் கொண்டு வரும் எந்த ஆயுதமும் உன்னை மேற்கொள்ளுவதில்லை. நீ உறுதியோடு விண்ணப்பம் பண்ண ஆரம்பித்துவிட்டால் அவன் தோற்று நடுங்கி ஓடியே போய்வான். நீ புதிய விசுவாசியாக இருக்கலாம். அல்லது எல்லா ஊழியரிலும் நீ சிறியவன் என்று எண்ணப்படலாம் ஆனால் உனது ஜெபம் எவ்வளவு பெரிய சத்துருவின் போராட்டமானாலும் அதை வென்றே தீரும்.

ஒன்றை மறந்து போகாதே ! சாத்தான் உன் ஜெபத்தை தடுப்பான். உன் ஜெபம் சாத்தானை தடுக்கும்.

நீ உறுதியாய் ஜெபிக்க ஆரம்பித்து விட்டால். சாத்தானின் தலையை நசுக்கிபோட்டு நீ ஜெயம் பெறுவாய். வேதம் சொல்லுகிறது: "சிங்கத்தின்மேலும் விரியன் பாம்பின்மேலும் நீ நடந்து, பாலசிங்கத்தையும் வலுசர்ப்பத்தையும் மிதித்துப் போடுவாய்.(சங் 91:13)

ஜெவீரனாவது எப்படி ? நீண்ட நேரம் தேவ சமூகத்தில் ஜெபிப்பது எப்படி? வரும் இதழ்களில் தொடருவோம்.

## காத்திருப்பதற்கு கற்றுக்கொள்ளுங்கள் !

தேவனுடைய நேரத்திற்கு முன்பாக ஒன்றை தாவி பிடிப்பது உங்களுக்கு சீரழிவை கொண்டுவரும். நம்முடைய ஒவ்வொரு காரியத்திற்கும் தேவனுடைய கால அட்டவணையில் நேரம் குறிப்பிடப்பட்டுள்ளது. உதாரணமாய் திருமண விஷயத்தை எடுத்துக் கொள்ளுங்கள், சரியான நேரத்திற்காக காத்திருங்கள். இந்த விஷயத்தில் நாமாவோ தன்னிச்சையாக முடிவு எடுத்தோ ஓடாதீர்கள். கட்டுப்பாடான வாழ்க்கையை நீங்கள் கற்று கொண்டவராய் இருந்தால் வாழ்வின் இன்பங்களுக்கும் பொறுப்புகளுக்கும், சிலாக்கியங்களுக்கும்,இடையில் காணும்கால வரம்புகளை, மதிப்பதற்கு கற்றுக்கொள்ளுங்கள்.

ஓர் இளம் ரோஜா மொட்டை நீங்கள் திறப்பதால் தேவனுக்கு உதவி செய்வதாக எண்ணிக்கொள்ளாதீர்கள், மாறாக, மலரும் மலர் மடிய நீங்கள் காரணமாகிவிட்டீர்கள். ஆகவே கர்த்தர் எல்லாவற்றிற்கும் ஒருகாலம் வகுத்திருக்கிறார், அந்த காலத்திற்காக நாம் காத்திருத்தல் அவசியம் வேதம் சொல்லுகிறது.

"நெடுங்காலமாய்க் காத்திருக்குதல் இருதயத்தை இளைக்கப்பண்ணும்; விரும்பினது வரும்போதோ ஜீவவிருட்சம்போல் இருக்கும் .(நீதி 13:12)

## அக்டோபர் மாத விடைகள்

| | | |
|---|---|---|
| 1. | சிம்சோன் | நியாயாதிபதி 15:5 |
| 2. | சிம்சோன் | நியாயாதிபதி 15:5 |
| 3. | சம்கார் | நியாயாதிபதி 3:31 |
| 4. | ஒத்னியேல் | நியாயாதிபதி 3:9.10 |
| 5. | யெப்தா | நியாயாதிபதி 11 :1 |
| 6. | அபிமலேக்கு | நியாயாதிபதி 9: 54 |
| 7. | இஸ்ரவேலர் | நியாயாதிபதி 5 : 8 |
| 8. | சிசெரா | நியாயாதிபதி 4:2 |
| 9. | செபுலோன், நப்தலி | நியாயாதிபதி 5 : 18 |
| 10. | சிம்சோன் | நியாயாதிபதி 16 : 20 |
| 11. | கர்த்தருடைய தூதன் | நியாயாதிபதி 13 : 20 |
| 12. | சிம்சோன் | நியாயாதிபதி 15:4 |
| 13. | யாகேல் | நியாயாதிபதி 5 : 24 |
| 14. | சிம்சோன் | நியாயாதிபதி 16 : 11 |
| 15. | தெபொராள் | நியாயாதிபதி 5 : 7 |

## அக்டோபர் மாத வேத வினாக்களுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சாந்தி
Sis. எப்சிபா ஸ்டீஃபன்
Sis. சுகந்தி தம்புக்குமார்
Sis. J. மேரிகலா
Sis. செல்வியா ஜெரின்
Sis. ஸோஃபியா மேஷாக்
Sis. செலின் டேவிட்
Sis. டாஃப்னி ஜெபசிங்
Sis. மரகதம் ஸ்டீஃபன்
Bro. ஜாண்சன்
Bro. அருணாசலம்
Bro.ஆரோக்கியராஜ்
Sis. ஜோன் ஆப் ஆர்க் அசோக்குமார்
Sis. ஜெபா
Sis. ஹேனா எசேக்கியேல்
Sis. லதா கிறிஸ்டோபர்
Sis. சுபா ஸ்டீபன்
Sis. பிரியா பிரேம் குமார்
Sis. மெர்சிலின் தயா ஏசுரெத்தினம்
Sis. ஜரின் சில்வியா ஆல்பர்ட்
Bro. ஆல்பர்ட்
Bro. லூர்த்சாமி
Bro. P. ஜஸ்டீஸ் டாஃப்னி ஏஞ்சல்

# "நான் நானே உங்களுக்கு ஆறுதல் செய்கிறவர் " ஏசாயா 51:12

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. அனுஷா செலஸ்டி
செல்வி. ஜெனிதா பால் பாண்டியராஜ்
செல்வி. கிரேஸ்லின் சாம் ஞானதுரை
செல்வி. லிடியா ஜான் வெஸ்லி
செல்வி. கவிதா கொம்மையன்
செல்வி. நயோமி ராமர்
செல்வன். சாமுவேல் ஜோசப் ஜாண்
செல்வன். ஷிஜு பால்
செல்வன். ஜாண்சன் ராஜவேல்
செல்வன். ஜோயல் ஜஸ்டின்
செல்வன். ஜாக் சாமுவேல் ஜாண்சன்
செல்வன். பிரின்ஸ் ஜோசப் பிரேம்குமார்
செல்வன். பென்ஜமின் ராமர்
செல்வன். பிரவீன் ஜெயச்சந்திரன்
செல்வன். அலெக்சாண்டர் அந்தோனி சாமி
சகோதரி. ஷீபா ராணி வெங்கடேஷ்
சகோதரி. சசிகலா ராமர்
சகோதரி. கிளாடிஸ் பாப்பி சிவகுமார்
சகோதரி. ஷீஜா ஸ்டீபன்
சகோதரி. சசிரேகா சதீஸ்குமார். E
சகோதரி. ஜீனா சதீஸ்குமார்
சகோதரி. கிறிஸ்டிலின் ஜோயல்
சகோதரி. கிறிஸ்டீனா முத்தையா
சகோ. சாமுவேல் ஜாண்சன்
சகோ. சிவகுமார்
சகோ. ஆல்வின் முத்தையா
சகோ. எட்வின் சாம் ஞானதுரை
சகோ. அலெக்சாண்டர் அந்தோனி சாமி






## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

| | |
|---|---|
| திருமதி / திரு. தாஸ் | திருமதி / திரு. கிறிஸ்டோபர் |
| திருமதி /திரு. ஸ்டீபன். T | திருமதி / திரு. ஜாண்சன் |
| திருமதி / திரு. ஆல்வின் | திருமதி / திரு. ஜெபசிங் |
| திருமதி / திரு. வேலு ராமர் | திருமதி / திரு. பால் அறிவுச்சுடர் |

# 2014 டிசம்பர் மாத நிகழ்ச்சி நிரல்

| நாள் | ஆராதனை | நேரம் | இடம் |
|---|---|---|---|
| 05/12/2014 | அஹமதி தமிழ் திருச்சபை பாடற்குழு ஆராதனை | மாலை 4:30 மணி– முதல் 6:30 வரை | புதிய ஜெப வீடு பாஹுல் |
| 12/12/2014 | உபவாச திருவிருந்து ஆராதனை | காலை 9:30 மதியம் 12:30 வரை | புதிய ஜெப வீடு பாஹுல் |
| 19/12/2014 | தமிழ் திருச்சபை ஐக்கிய கிறிஸ்மஸ் பாடல் ஆராதனை | மாலை 3:30 மணி– முதல் 6:30 வரை | Abu Halifa Community Hall |

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 26/12/2014 | குடும்ப ஆராதனை | |
| | சகோ. டேவிட் குமார் | சகோ.பிரேம்குமார் |
| 01/01/2015 | புது வருட ஆராதனை | |
| | சகோ. ஜஸ்டின் சுந்தரராஜ் | சகோ. ஜெகநாதன் |

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 7/12/2014 | சகோ. ஜெயசேகர் | சகோ. ஸ்டாலின் |
| 14/12/2014 | சகோ. ஜசக்துரை | சகோ.ஆரோக்கியதாஸ் |
| 21/12/2014 | சகோ. அற்புதராஜ் | சகோ. ரவி ஜான் பீட்டர் |
| 28/12/2014 | சகோ. கிறிஸ்டோபர் | சகோ. அசோக்குமார் |

| நாள் | ஆராதனை | நேரம் | இடம் |
|---|---|---|---|
| 12/12/2014 | ICC Christmas Carol | மாலை 4:45 மணிமுதல் 8:30 வரை | அஹமதி DPS School |
| 25/12/2014 | கிறிஸ்மஸ் ஆராதனை(செய்தி. Rev. ஹாரிஸ் சின்னகுமார்) | காலை 5:40 மணி– முதல் 7:10 வரை | பரி பவுல் ஆலயம் அஹமதி |
| 31/12/2014 | வாக்குத்தத்த ஆராதனை | இரவு 10:00 மணி முதல் 01:30 வரை | Abu Halifa Community Hall |

**கிறிஸ்மஸ் கீத பவனி நாட்களும் இடங்களும்**

06/12/2014–09/12/2014–பாஹீல் /–/ 10/12/2014–14/12/2014– மங்காஃப்

15/12/2014–18/12/2014– அபுஹலிஃபா/மஹபுல்லா

# டிசம்பர் மாதத்திற்கான வேத வினா ! புதிர்

கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வேத ஆதாரத்துடன் ஏழுதவும் புதிருக்குள் வரும் விடையின் எழுத்துக்கள் அடைப்பு குறிக்குள்( ) குறிக்கப்பட்டுள்ளது. தங்கள் விடைகளை வசனம் மற்றும் அதிகாரத்தின் பெயருடன் குறிப்பிடவேண்டும்

***வலம் இருந்து இடம்***

3. சிமியோனின் குமாரன் கெர்சோனின் வம்சத்திலும் இப் பெயருள்ளவன் உண்டு(2)
5. தாவீதின் இராணுவ தலைவன் பெயர் ( 3)
6. இஸ்மவேலின் சந்ததியான இவன் பெயரில் இஸ்ரவேலர் தேவனை பரீட்சை பார்த்த இடத்தின் பெயர் ( 2)

***இடம் இருந்து வலம்***

1 ஒரு வனாந்தரத்திற்கு இப் பெயர் உண்டு, ஒரு ஊருக்கும் இப் பெயர் உண்டு (5)
2. தாண் வம்சத்து பராக்கிரமசாலியின் ஊர் (2)
3. தன் தகப்பனுக்கு மூன்றாவதாய் பிறந்தாலும், முதலாவதாய் அட்டவனையில் வருகிறவன்( 2)
4. ஏபோத் தரித்த ஆசாரியன், பினேகாசின் வம்சத்தான் , இவன் பெயரில் ஒரு ராஜாவும் உண்டு( 3)
5. பிரதான ஆசாரியன இவன் ஒரு ராஜாவை காப்பாற்றி அரியணை ஏற்றிய சாதனை இவருக்குண்டு (3)

***மேலிருந்து இருந்து கீழ்***

1. இது இரு எழுத்து பெயர் இது மகன் என்ற பொருளுடையது இது கானான் என்ற நாட்டு பெயரோடு சேர்த்து கானான் மகன் என்றும் சோகேது என்ற ஊர் பெயரோடு சேர்த்து சோகேது மகன் என்ற பொருளிலும் ஒரே வசனத்தில் வருகிறது(2)
2. சாலமோனின் அரண்மனைக்கு தேவையான உணவு பொருட்களை வழங்குவதில் இந்த பகுதியும் விசாரிப்பில் இருந்தது( 2)
4. 300 பேரை தன் ஈட்டியால் மடங்கடித்த பராக்கிரமசாலி (3)
7. ஆபிரகாமின் குமாரன் இவன் .(3)
8. ஒரு தீர்க்கதரிசியின் பெயர். இவன் வம்சத்தில் முத்திரை போடபட்டவர்கள் 12000 பேர்(2)
9. ஒரு நாட்டின் பெயர் இதை கடந்துதான் ஞான திருஷ்டிக்காரனை பார்க்கமுடியும் (2)
10. நீதியை பிரசங்கித்தவன் இவன், இவனால்தான் புது உலகில் ஜனம் வந்தது(2)

***கீழ் இருந்து மேல்***

3.ஒரு தண்ணீர் துரவின் பெயர் (2)
5. ஒரு தீர்க்கதரிசியின் பெயர் அவன் பெயரில் ஒரு ஆகமமே இருக்கிறது(3)
9. ஒரு நாட்டின் பெயர், கொள்ளைகாரரின் ஒரு படை இந்த நாட்டு வழியாய் போனது (3)
11. அப்பாவின் குமாரத்திக்கும் இப் பெயர் உண்டு, மகனின் குமாரத்திக்கும் இப் பெயர் உண்டு(3)
12. இங்கே கிடைக்கும் தைலம் சுகமாக்கும் குணமுடையது. இம்மலையில் ஆடுகளுக்கு நல்ல தழை கிடைக்கும் .

<u>விடைகளை கீழ் காணும் அதிகாரங்களில் தேடி கண்டு பிடிக்கவும்</u>

(ஆதியாகமம் 4,9,21,25,26,) (யாத்ராகமம் 17,)( நியாயாதிபதிகள் 13,)( 1 சாமுவேல் 9,13,14,24,)( 2 சாமுவேல் 13,14,20,23 ,)( 1 இராஜா 15,4,)( 2 இராஜா 11,)( 1 நளாா 1,4,6 2 )(2 –நாளா 6,)( சங்கீதம் 60, )(உன்னதபாட்டு 2,)( யோவேல் 1,)( லூக்கா 3,)(அப்போஸ் 2 ,)(2 பேதுரு 2,)( எரேமியா 8 ,)( வெளி 7.)

## வாலிபர் பகுதி

### கிறிஸ்தவத் தின் உண்மைகள்

# பெத்லகேம்

பெத்லகேம் என்ற பெயரை கேள்விபடாத கிறிஸ்தவர்களே இருக்க மாட்டார்கள். இது இயேசு கிறிஸ்து பிறந்த இடம் என்பதால் உலக மக்கள் கவனத்தை கவர்ந்த இடமானது. இஸ்ரேல் பயணம் போகிற ஒவ்வொருவரும் பார்த்து வருகிற இடம் இது. பெத்லேம் என்ற பெயரில் 2 ஊர்கள் இருக்கின்றன, ஒன்று யூதாவில் உள்ள பெத்லகேம், இன்னொன்று செபுலோனை சேர்ந்த பெத்லகேம். எருசலேமிலிருந்து தென் மேற்காக 6 மயில் தூரத்தில் உள்ளதுதான், இயேசு பிறந்த பெத்லகேம். இதற்கு எப்பராத்தா என்ற பெயரும் உண்டு. (ஆதி 35:19)

பெத்லகேம் என்பதற்கு எபிரெய மொழியில் அப்பத்தின் வீடு என்றும், அராபியா மொழியில் மாமிசத்தின் வீடு என்றும் பொருள்படும். சர்வலோக மனிதருக்காக அப்பமாக தன் மாமிசத்தை கொடுத்த இயேசு பிறந்த ஊர் பெத்லகேம் என்பது எத்தனை பொருத்தமான பெயர் என்று பாருங்கள். எப்பிரத்தா என்பதற்கு செழிப்பானது என்று பொருள் உண்டு. பெத்லமேமை சுற்றிலும் வயல் நிலங்களும் அதிகம். பெத்லகேமில் 80 சதவீதம் பேர் விவசாயிகள் ரூத் போவாஸின் வயலில் கதர் பெருகினது இந்த பெத்லகேமில்தான், (ரூத் 1:22). இங்கே ஆடுகள் வளர்பது அதிக லாபம் தரும் தொழில் ஏனெனில் எருசலேம் பக்கத்தில் இருப்பதால் பலி செலுத்த இங்கிருந்து ஆடுகளை வாங்கி போவார்கள். ஆகவே மேய்ப்பர்கள் அதிகம் இருந்தனர். அந்த மேய்ப்பர்களுக்குத்தான் தேவதூதன் இயேசுவின் பிறப்பை பற்றிய செய்தியை சொன்னார்கள் தாவீது பிறந்த ஊர் இதே பெத்லகேம்தான்.

இந்த பெத்லகேமில் கிபி 325ல் கான்ஸ்டன்டைன் சக்ரவர்த்தியான போது அவனது தாயார் ஹெலன் தான் கிறிஸ்தவள் ஆனதால் இயேசு கிறிஸ்து பிறந்த இடத்தை கண்டுபிடித்து ஒரு ஆலயத்தை (சர்ச்) கட்டி வைத்தாள். இன்றைக்கும் அது நேட்டிவிட்டி சர்ச் என்ற பெயரில் இருக்கிறது. இஸ்ரேல் செல்லுகிறவர்கள் இதை பார்க்காமல் திரும்புகிறதில்லை. இயேசு பிறந்த இடமாக மட்டுமல்லாமல், வழிகாட்டிகள் 3 இடங்களை குறிப்பிடுகிறார்களாம். இதை போல பார்த்து வந்த ஓர் ஊழியர் விட்ட "கப்சாவை" பார்ப்போம்.

வழிகாட்டி சொன்ன 3 இடங்களிலும் ஜெபம் செய்தேன். உண்மையாக இயேசு பிறந்த இடத்தில் ஜெபம் செய்த போது ஒரு குழந்தை அழுகிற மெல்லிய சத்தம் கேட்டது, அது இயேசு பாலகன் சத்தம் என்று கண்டு கொண்டேன், அந்த இடம்தான் இயேசு பிறந்த இடம் என்று உறுதிபடுத்தி கொண்டேன் என்றார். இப்படியும் சில தீர்க்கதரிசிகள் அப்பத்தின் வீட்டை அடையாளம் காட்டி (கொடுத்து) அப்பம் சாப்பிடுகிறார்கள். இது உலகத்தின் மையம் என பூலோக சாஸ்த்திரிகள் கணிக்கிறார்கள். இது வரலாற்று சிறப்புமிக்க ஊர் என்பதோடு உலகத்தின் கவனத்தை கவர்ந்தும். ஒவ்வொரு நாளும் திரளான பயணிகள் வந்து பார்த்து செல்கிறதுமான சுற்றுலா ஸ்தலமாகவும் விளங்குகிறது.

வாழ்க கிறிஸ்தவத்தின் உண்மைகள்

வளர்க கிறிஸ்தவத்திற்காக நம் முன்னோர் செய்த தொண்டு

# ஆதங்கம்! ஆராதனையின் மேல்

என் நேசர் என்னை
விருந்து சாலைக்கு
கூட்டி வந்தார் மகிழ்விக்க!
இன்று எது விருத்து சாலை
என்று புரியாதோர் கூட்டம்
பறக்க ஓடுகின்றன
ஆராதனை வீரரை பார்க்க
குலுங்குகிறாராம் , ஜனத்தை
குலுக்குகிறாராம் ! கூட்டம்
அலை மோதுகிறதாம் – செய்தி
நவ நாகரீகம் – தாளம்
சுப நாகரீகம் என் முடிவு என்றால்
உலகத்தை சபை
தன் வசப்படுத்துவதை
காண சகிக்கவில்லை!
கர்த்தாவே சீக்கரம் வாரும்!
இன்றைய ஆராதனையில்
அலங்காரம் இல்லையாம்
உபவாசம், ஜெபம் என
பழங்கால பக்தி பேசுகிறோமாம்
எல்லாவற்றையும் இயேசு
செய்து முடித்த பின்பு
நாம் ஏன் உபவாசிக்க?
நாம் ஏன் ஜெபிக்க வேண்டும்?
இயேசுவின் கிருபைக்கு
இல்லையா வல்லமை?
என்கின்றனர் ஆராதனை வீரர்கள்!
கிரியையல்ல – கிருபையால்
இரட்சிக்கபட்டோம்
நான் ஏன் ஜெபித்து
தேவ கிருபையை
மட்டுபடுத்த வேண்டும்
என்கிறார்கள்! அல்லேலூயா!
நான் ஜெயங்கொண்டு – என்
பிதாவின் சிங்காசனத்தில்
அமர்ந்தது போல –எவன்
ஜெயங்கொள்கிறானோ அவனும்
என்னோடே கூட
அமரலாம் என்னுடைய
சிங்காசனத்தில் என்றவர்
ஏன் என்னை ஜெயங்
கொள்ள சொன்னாரோ
தெரியவில்லை –தெரிந்தால்
எனக்கும் சொல்லுங்கள்
நானும் பரலோகம்
வர ஆசையாய் இருக்கிறது
நேரமில்லை நேரமில்லை
அகில உலகமும்கம்பியூட்டர்
வேகத்தில் ஓடுவதை
விவேகமுள்ளவர்கள் சிந்திக்கட்டும்
வீணான ஆராதனை என்று
வேலை மெனக்கெடுவானேன்?
என்போரை என்ன சொல்ல
ஆலயத்திற்கு போவோம்
என்றவுடன், தாவீதின்
கால்கள் எருசலேம் வாசலில்
அன்று நின்றன – இன்றோ
ஆராதனையின் அர்த்தமே
புரியவில்லை பலருக்கு
பார்வோன் தடுத்தது
எகிப்திலேதான்
என பண்பாடு 'வோர்
தடுகின்றனர் –கர்த்தரின்
பட்சத்தில் நிற்கிறவர்கள்
பட்டயம் ஏந்தத்தான் வேண்டும்
விக்கிரகம் செய்வதைத்
தடுத்து , சகோதரன் எனினும்
வெட்டி வீழ்த்தத்தான்
வேண்டும் –இந்த ஜனத்தை
எனக்காக ஏற்படுத்தினேன்
இவர்கள் என் துதியை சொல்லி
வருவர்கள் என்றவர்,
எதிர்பார்கிறார்.
ஆராதிப்போம் !
துதிப்போம்! அல்லேலூயா !
துதி அவருக்கே

## அலெக்ஸாண்டர் மெக்கே (1849-1890)

ஸ்காட்லாந்து தேசத்தில் ரைனே என்ற இடத்தில் 1849-ம் வருடம் அக்டோபர் 13-ம் தேதி பிறந்தார். சிறு வயதிலேயே தனது இருதயத்தை கிறிஸ்துவுக்காக அர்ப்பணித்ததுடன் நேர்மையாக வாழவும், கிறிஸ்துவுக்காக எதாவது செய்யவும், துடிப்புடன் இருந்தார். இவரது வாழ்வைக் கவனித்த பெற்றோரும் தங்களது மகன் ஒரு போதகராகவோ மிஷனெரியாகவோ மாறுவான் என்ற நம்பிக்கையுடன் இருந்தனர். சபைப் போதகரான தனது தந்தையின் வேத போதனைகளும், தனது தாய் சொல்லும் வில்லியம் கேரி, ஹன்றி மார்ட்டின், டேவிட் லிவிங்ஸ்டன் போன்றோரின் மிஷனெரி சரிதைகளையும் விரும்பிக் கேட்பார். தொழில் நுட்பத்தில் அதிக ஆர்வமுடைய அலெக்ஸாண்டர். தனது தகப்பனாரின் ஆலயக் கட்டுமானப் பணியின் போது அங்குள்ள தொழிலாளர்களுடன் சேர்ந்து பணி புரிந்தார். அடிக்கடி நான்கு மைல் தூரம் நடந்து ரயில் நிலையம் சென்று அங்கு வந்து நிற்கும் ரயிலையும் இன்ஜின் டிரைவர் எப்படி இயக்குகிறார் என்பதையும் கூர்ந்து கவனித்துவிட்டு திரும்பி நான்கு மைல் நடந்தே வீட்டுக்கு வருவார். பதிமூன்று வயதான அலெக்ஸாண்டர் கப்பல் கட்டும் தொழில்நுட்ப கல்வியைக் கற்றார். ஜெர்மனிக்கு மேற்படிப்பிற்காகச் சென்றார். டேவிட் லிவிங்ஸ்டன் என்ற மிஷனெரியின் வாழ்க்கைச் சரிதையைப் படித்துவிட்டு, தனது டைரியில், லிவிங்ஸ்டன் இறந்து விட்டார். ஆப்பிரிக்கா தேசத்தில் தேவனையும், தனது அயலானையும் நேசித்த ஸ்காட்லாந்து கிறிஸ்தவன் நீயும் போய் அப்படியே செய் என்று எழுதினார் அலெக்ஸ்.

முன்னேற்றமில்லாத ஆப்பிரிக்கா போய் என்ன செய்வது? என்று பல கேள்வியுடன் இருந்த அலெக்ஸ் 1875-ஆம் ஆண்டு டிசம்பர் 12-ம் தேதியில் "டெய்லி ரெவியூ" என்ற பத்திரிக்கையைப் படிக்க நேர்ந்தது. அதில் உகாண்டாவின் ராஜா வெள்ளை மனிதர்களின் கடவுளை அறிய வாஞ்சை காட்டுகிறார். உகாண்டா மக்களின் நோய்களைக் குணமாக்கவும், அவர்களுக்கு வீடுகளைக் கட்டவும் எந்த வேலை செய்யவும் ஆயத்தமாக உள்ள மனிதர் கிடைப்பாரேயானால் அவர் ஆப்பிரிக்கா தேசத்தை மீட்பவராவார் என்று எழுதியிருந்தார். இதனைப் படித்த அலெக்ஸாண்டருக்கு இது தெய்வீக அழைப்பாகவே இருந்தது. உடனே ஏழு வாலிப மிஷனெரிகளுடன் 1876-ம் ஆண்டு ஏப்ரல் 27-ம் தேதி ஆப்பிரிக்கா தேசத்திலுள்ள உகாண்டாவிற்கு கப்பல் ஏறினார் அலெக்ஸ். சென்சிபர் என்ற இடத்தை அடைந்தவுடன் அலெக்ஸாண்டர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு அங்கு சில காலங்கள் தங்கினார். சுகமடைந்ததும் தன்னுடைய பணியைத் தொடர ஆரம்பித்தார். தன்னுடன் எடுத்து வந்த உபகரணங்கள் மூலம் கடற்கரையிலிருந்து எம்பிவாப்வா என்ற இடம் வரை 230 மைலுக்கான பாதையை பல கடினமான சூழ்நிலையின் மத்தியில் அமைக்க ஆரம்பித்தார். இருண்ட காட்டின் நடுவே பாதை அமைத்ததைப் போல அவர்களது இருண்ட மூட நம்பிக்கைகளைத் தகர்த்து எறியப் பாடுபட்டார். இயேசு கிறிஸ்துவும் இவ்வுலகில் இருந்தபோது தச்சனாகப் பணிபுரிந்ததை விளக்கி வேலை செய்வது இழிவானது அல்ல என்று உணர்த்தினார் அலெக்ஸ்.

உகாண்டா மக்களுக்கு அங்குள்ள மாசுபட்ட தண்ணீரால் நோய்க்கிருமிகள் தாக்கி பல்வேறு நோய்களால் அவதிப்படுவதைப் பார்த்து கிணறு வெட்ட ஆரம்பித்தார்.

தன்னுடன் எடுத்துவந்த அச்சு இயந்திரம் மூலம் எழுத்து உருவங்களைப் பெரியதாக அச்சிட்டு மக்களுக்கு எழுதப் படிக்க சொல்லிக்கொடுத்தார். தனது மீதியான நேரத்தை புதிய ஏற்பாட்டு பகுதிகளை அவர்களது மொழியில் மொழி பெயர்ப்பும் செய்தார். இப்படி பல பணிகளை அலெக்ஸாண்டர் செய்தபோதும் தனது இலக்கான ஆத்தும ஆதாயப்பணியை மறக்கவில்லை. ஆத்துமாக்களுக்காக பற்றி எரியும் வைராக்கியத்தை எனக்குத் தாரும். அழிந்து கொண்டிருக்கும் ஆத்துமாக்களுக்கும், இரட்சிக்கும் கிறிஸ்துவுக்கும் இடையே ஒரு இணைப்பாக இங்கு நான் நின்றுகொண்டிருக்கிறேன் என ஜெபிப்பார். எந்த வழி முறைகளிலாவது, சுவிசேஷம் இந்த இருண்ட கண்டத்தின் மூலை முடுக்கெல்லாம் சென்றடைய பாதையைச் செவ்வை பண்ணுவேன் என்பார். இவரது அர்ப்பணிப்பை ஆண்டவர் கனம் பண்ணி, செம்பெரா என்பவரை முதல் விசுவாசியாகத் தந்தார். இவரது ஞானஸ்நானத்திற்குப் பிறகு, ராஜாவின் மூன்று ஆட்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். அநேக ஆத்துமாக்கள் மந்தையில் சேர ஆரம்பித்தனர். ராஜாவும் சுவிசேஷத்தைக்கேட்டு ஞானஸ்நானம் எடுக்க ஆயத்தமாக இருந்தார். ராஜாவின் சுகவீனத்தின்போது மந்திரவாதிகளின் வார்த்தையின்படி இரண்டு ஆயிரம் ஏழை விவசாயிகள் கொல்லப்பட்டனர். தன்னுடைய உயிரையும் பணயம் வைத்து அலெக்ஸாண்டர் ராஜாவுக்குக் கடிதம் எழுதி இப்படி உயிர்களைக் கொல்வதை விட்டுவிடக் கெஞ்சினார்.

சிறிது நாட்களில் ராஜா மேடேசா இறந்து போனார். அவருக்குப் பின் வந்த ராஜா மேவான்கா அதிகக் கொடூரமானவன். கிறிஸ்துவைப் பின்பற்றி வந்த மக்களைக் கொடூரமாகக் கொலை செய்ய ஆரம்பித்தான். மூன்று கிறிஸ்தவ வாலிபர்களின் கரங்களை வெட்டித் தீயிலிட்டுக் கொலை செய்தான். 200 கிறிஸ்தவர்களைப் பிடித்துக் கைகளை வெட்டி மிதமான தீயில் வறுத்து சுட்டு எரித்தான். அநேகக் கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டனர். மீதியாய் இருந்தவர்கள் சிதறப்பட்டுப் போனார்கள். அலெக்ஸாண்டர் உயிருக்கும் ஆபத்து இருந்தது. அதிகம் சோர்வுற்ற அலெக்ஸ் பவுலைப் போல் நாங்கள் எப்பக்கமும் நெருக்கப்பட்டும் சோர்வடைவதில்லை என்ற வாக்குக்கேற்ப தன்னை தேவனுக்குள் திடப்படுத்திக கொண்டு ஊழியத்தைத் தொடர்ந்தார். 1890–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 8–ம் தேதி ஆப்பிரிக்கா தேசத்தில் கடுமையான காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு தனது 41–வது வயதில் உகாண்டாவிலேயே மரித்தார். 14 வருடம் ஆப்பிரிக்கா தேசத்திலே பணிபுரிந்த அலெக்ஸ் ஒருமுறைகூட தனது சொந்தநாடு திரும்பவில்லை. "இன்று உகாண்டாவின் பிரதம மந்திரி அப்போலோ காக்குவா ஒரு கிறிஸ்தவர். இவர் சிறுபையனாக இருந்தபோது ராஜா மவாங்காவினால் அடித்து உபத்திரவப்படுத்தப்பட்டவர். இன்று உகாண்டாவின் ராஜா கவடியும் ஒரு கிறிஸ்தவர். தலைநகரில் ஒரு அழகிய தேவாலயம் உண்டு. இங்கு 70000 உகாண்டா கிறிஸ்தவர்களும் உண்டு. ராஜாவிற்காக, விக்கிரகத்திற்காக மனிதர்கள் கொல்லப்படுவது நிறுத்தப்பட்டது. இப்படிப் பட்ட பெரிய மாறுதலை அலெக்ஸாண்டர் தன் சொந்த கண்ணால் பார்க்கவில்லை என்றாலும் அவர் செலுத்தின விலைக்கிரயம் வீணாகவில்லை.

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரர்

சுகுமார்

## சகோதரிகள் பகுதி

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதரிகளுக்கு கருணையின் பிதா கல்வாரி நாயகனாகிய அருள் நாதர் இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தல் அன்பின் வாழ்த்துக்கள்.

## ஒழுங்கும் கட்டுப்பாடும் நிறைந்ததோர் மனுஷியாய் (மனிதனாய்) மாறுவதெப்படி?

பிரியமான சகோதரிகளுக்கு ! எல்லாவற்றிற்கும் முதலாவது, ஓர் ஒழுங்கு நிறைந்த கட்டுப்பாடான வாழ்க்கை வாழும்படியான உங்கள் நோக்கத்தை உறுதியாய் பற்றிக்கொள்ளுங்கள். "என்னுடைய சோம்பேரிதனத்தின் நிமித்தம் நான் தேவன் விரும்பும் ஸ்திரியாய்(புருஷனாய்)இல்லாமல் இருந்தால் என் ஆண்டவருக்கு பெரிய ஏமாற்றத்தை கொடுப்பேன்!" என்பதை அடிக்கடி சிந்தித்து பாருங்கள்.

அற்பமான விஷயங்களில் இருந்து ஓர் கட்டுபாட்டுடன் ஜீவியத்தை துவக்குங்கள், ஓர் ஒழுங்கு நிறைந்த கிறிஸ்தவள்(கிறிஸ்தவன்)பிறருக்குறிய வீண் அலுவல்களில் தலையிடுவதிலிருந்து தன்னை காத்து கொள்வார்கள். பிரியமான சகோதரியே இது எதில் தொடங்குகிறது என்று பார்த்தோமானால்.நம் வீட்டை நாம் ஒழுங்கு படுத்துவதில் இருந்து படுக்கையை சுத்தம் செய்வதில் இருந்து கழிப்பறை சுத்தம் செய்வது வரை நம்முடைய ஒழுங்கு தேவனால் பார்வையிட படுகிறது.

"புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள்; புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை இடித்துப்போடுகிறாள்."( நீதி 14:1)

எல்லா மனிதர்களிடத்திலும் மரியாதை காட்டுங்கள். யாரிடமாவது போசும்போது அல்லது பேசுவதை கேட்கும் போதோ அவர்கள் முகத்தை பார்த்து கவனிக்கும் பழக்கத்தை வளர்த்துக்கொள்ளுங்கள். அப்படி செய்வதால் தற்சமயம் யார் சொல்லுவதும் எனக்கு முக்கியமல்ல" என்ற ஓர்உணர்வை நீங்கள் வெளிபடுத்துகிறீர்கள். இன்னுமொறு படி மேல் சொன்னால், உங்களிடம் பேசுபவர்களுக்கு உங்கள் மேல் இருக்கும் மதிப்பு உயரும்.நீங்கள் அவரால் மதிக்கப்ட கூடிய நபராக மாறிவிடுவீர்கள். மாறாக யாராவது உங்களிடம் பேசும் போது அவர்களை தவிர்கும் விதத்தில் நீங்கள் அவர்களை கவனியாமல் இருக்கும் பட்சத்தில் மறுமுறை அவர்கள் நம்மிடம் முகம்கொடுத்து பேசமாட்டார்கள் இதுதான் உண்மை சகோதரிகளே.

சபையில் செய்தி வேளையில் நமது பார்வையை அங்கும் இங்கும் அலைமோதவிடாமல் செய்தி கொடுப்பவரை உங்கள் கண் கவனிக்கும்படி உங்களை கட்டுபடுத்தி கொள்ளுங்கள். சுற்றி இருக்கும் ஜனங்களை பார்பதும் அல்லது குனிந்து கொண்டுஉங்கள் பாதங்களை கவனிப்பதோ ஆண்டவருக்கும் செய்தி கொடுப்பவருக்கும் அவமரியாதை தரும் ஒழுங்கற்ற செயலாகும்.

"ஆதலால், அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக்கொள்ளக்கடவோம்"(எபிரெயர் 12:28)

கடினமான பனிகளை காலம் தாழ்த்தாமல் சாதுர்யமாய் கையாளுங்கள் "கடைசியில் பார்த்து கொள்ளலாம் " என்று நீங்கள் எண்ணிவைகளை முதலில் செய்யுங்கள்.

சபை கூட்டங்களுக்கும் , நீங்கள் போகும்படி முன் குறித்த இடங்களுக்கும் , காலதாமதமின்றி செல்லும் பழக்கத்தை கைகொள்ளுங்கள்.கிறிஸ்தவ ஒழுக்கம் இவ்வித

கால தாமதமின்றி வரும் பழக்கத்தை தன்னில் எதிர்பார்கிறது என்பதை உணராத ஒரு சகோதரி (அல்லது) ஒரு சகோதரன் இந்த நல்ல பழக்கத்தை ஒருநாளும் சுதந்தரித்து கொள்ளவே முடியாது, மேலும் குறிப்பிட்ட இடத்திற்கு சரியான நேரத்தில் போவதற்கு முன் கூட்டியே திட்டமிட்டு போதுமான அவகாச நேரத்தை ஒதுக்குவதற்கு பழகாத யாரும் இந்த நல்ல பழக்கத்தை கற்று கொள்ளவே முடியாது.

பிரயோஜனமற்ற பகற்கனவை சிந்தித்து கொண்டு உங்கள் நேரம் வீணாகுவதற்கு ஒரு போதும் அனுமதிகாதீர்கள் . எந்த சிந்தையையும் கிறிஸ்துவுக்குள் சிறைபடுத்துங்கள். உங்கள் உபரி நேரங்களை நல்ல ஆவிக்குறிய கிறிஸ்தவ புத்தகங்களை படிப்பதில் செலவிடுங்கள். அல்லது உங்கள் சக கிறிஸ்தவர்களின் ஆவிக்குறிய நண்பர்கள் பக்கத்து வீட்டுக்காரர்கள் இரட்சிக்கபடாமல் இருந்தால் அவர்களுக்காக மன்றாட்டின் ஜெபத்தை ஏறெடுங்கள். மற்றவர்களுக்காக திறப்பின் வாசலில் முழங்காலில் நின்று ஜெபிக்கதக்க நேரத்தை செலவிடுங்கள். அது மற்றவர்கள் விடுதலை அடைய நேரிடலாம் , அல்லது அது உங்களது ஜெப ஜீவியத்திற்கு நல்ல முன்னேற்ற பாதையாக கூட அமையலாம்."கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது;"(பிலி 2:5)

பிரியமான சகோதரிகளே நாம் ஒருங்கினைத்த ஒரு சில நிகழ்ச்சிகளையோ அல்லது திட்டங்களோ எதிர்பாராத நிகழ்ச்சிகளால் சிதைக்கபடகூடிய சூழ்நிலை வரலாம், அதற்காக யாரிடமும் உள்ளம் குமுறியோ கோபப்பட்டோ காரியம் ஆகப்போவதில்லை. அப்படி செய்வதால் நமக்குதான் சமாதான குறைவு, வேண்டுமென்றே அதை குலைக்க செய்கிறவர்களுக்கோ மகிழ்ச்சி, மாறாக இப்படி செய்வோம். இப்படிபட்ட சூழ்நியை அனுமதித்தவர் ஆண்டவர் அல்லவா! அவருக்கு நன்றி செலுத்தவோம். "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்."(ரோமர் 8:28) ஐயோ என் திட்டங்கள் வீணாகி விட்டதே என்று உங்களுக்கு தோன்றினாலும் அச்சூழ்நிலையை தேவனே மிக லாவண்யமாய் தன் சுக்கானை திருப்பி அது உங்களுக்கு மிக நன்மையாய் இருக்கும் படி செய்வார்.

உங்களை குறை கூறி விமர்சனம் செய்கிறவர்களை நேசியுங்கள். அது ஒரு வேளை நம்மை சீர்தூக்கி கொள்ள சில திருத்தலாக கூட இருக்கலாம் அல்லவா! தனி மனித விமர்சனங்களை தேவன் உங்களுக்கு அனுமதிக்கிறார் என்றால் நீங்கள் தேவனால் உயர்த்தப்பட போகிறீர்கள் என்று அர்த்தம். இது உண்மையில் ஒரு கட்டுபாடுள்ள வாழ்க்கை. மிக முக்கியமான ஒன்று உங்களை விட தாழ்ந்தவர்களிடமிருந்தும் கற்று கொள்வதற்கு விருப்பம் கொண்டவர்களாக இருங்கள் "அவர் அதிகமான கிருபையை அளிக்கிறாரே. ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது"(யாக் 4:6)

தேவையற்ற பிறருக்குரிய காரியங்களை அறிந்திட விரும்பும் ஆசையை! சுய கட்டுபாட்டுக்குள் கொண்டு வாருங்கள் பிறருக்குரிய காரியங்களில் வீணாக தலையிடாதீர்கள். முக்கியமாக யார் சொல்வதையும் எளிதில் நம்பி மற்றவர்களை குறித்தோ அல்லது குறிப்பாக ஒரு சமுதாயத்தை குறித்தோ அவர்களா? அவர்கள் அப்படிபட்டவர்கள்தான் என்று எதை குறித்தும் பாதகமான எண்ணங்களை உருவாக்கி கொள்ளாமல் இருங்கள். "நான் செய்வதுதான் சரி" என்று சாதிக்கும் பிடிவாதத்திற்கு விலகி நில்லுங்கள். இது போன்ற சுழ்நிலைகள் உங்களை சந்திக்கும் நேரத்தை விழிப்புடன் கண்கானியுங்கள். ஒருவனுக்கும் தீமைக்குத் தீமைசெய்யாதிருங்கள்; எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள்.(ரோமர் 12:17)

கர்த்தர் உங்கள் அனைவரோடும் கூட இருப்பாராக ! ஆமென்

# புதிய ஜெப வீடு பிரதிஷ்டை, மற்றும் ஆண்டுவிழாவின் சில நிகழ்வுகள் உங்கள் பார்வைக்கு

















உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக
ஜெபியுங்கள்

செயற்குழு உறுப்பினர்கள்

தலைவர் - சகோ. ரவிச்சந்திரன்
23913675 - 66889706

செயலாளர் - சகோ. ஜெசேகர்
23711698 - 96646444

பொருளாளர்- சகோ. ஆரோக்கியதாஸ்
99870126

பெண்கள் ஐக்கிய தலைவி
சகோதரி . ஜெயகொடி ஜான் வெஸ்லி
23731904 - 99145593

வாலிப ஐக்கிய தலைவர் - சகோ. அற்புதராஜ்
60692485

Merry Christmas

Church Website Address - ahmaditamilcongregation.org

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address - Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

Private Circulation only